இனிமையான குழந்தைகளே ! ஆத்ம உணர்வுடையவர் ஆகுங்கள். இது மிகப் பெரிய குறிக்கோள் ஆகும். ஆத்ம உணர்வு உடையவர்களைத் தான் ஈஸ்வரிய சம்பிரதாயத்தினர் என்று கூறுவார்கள். அவர்களுக்கு பாபா மற்றும் பரந்தாமத்தை தவிர வேறு எதுவும் நினைவிற்கு வராது.

கேள்வி: எந்த ஒரு விஷயத்தை தாரணை செய்வதால் எதிர்காலத்தின் 21 பிறவிகளுக்கு செல்வம் சேமிப்பாகி விடுகிறது?

பதில்: ஸ்ரீமத் படி தனக்கும் மற்றவர்களுக்கும் நன்மை செய்வதால். யார் முழுமையாக ஆத்ம உணர்வு உடையவர்களாக இருக்கிறார்களோ, யாருடைய புத்தி தூய்மையாக இருக் கிறதோ அவர்களே நன்மை செய்ய முடியும். தேக உணர்வில் வருவதால் தீமை ஆகி விடுகிறது. மேலும் சேமித்து வைத்த செல்வமும் அழிந்து போகிறது. நஷ்டமாகி விடுகிறது. கோபம் என்ற பூதமும் கூட தீங்கு செய்கிறது. ஆகவே தனது சுபாவத்தை மிகவும் இனிமை யாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

பாடல்: இன்று யார் வந்தது.....

ஓம் சாந்தி. பரமாத்மா பாபா வந்து ஜீவாத்மாக்களை சந்திக்கும் பொழுது ஜீவாத்மாக்களுக்கு தன்னுடைய உடல் என்ற உணர்வு மறந்து போகிறது. அவர்களுக்கு நாம் ஆத்மா பரம்பிதா பரமாத்மாவின் வாரிசு என்ற நிச்சயம் ஏற்படுகிறது. மற்றபடி நாம் பார்க்கக்கூடிய இந்த தேகம், தேக சம்பந்தப்பட்ட அனைத்து உறவுகளும் நினைவிலிருக்கவே கூடாது. தந்தை வந்திருப்பதே குழந்தைகளை வீட்டிற்கு அழைத்துச் செல்வதற்காக ஆகும். இது என்ன நடக்கிறது என்று ஆச்சரியம் எழுகிறது. பிரம்மாவின் இரவு முடிவடைந்து காலை ஏற்படுகிறது. தேகம் உட்பட தேகத்தின் உறவுகள் அனைத்தும் துண்டிக்கப்படுகிறது. எனவே என்ன ஆகி விட்டது! என்று ஆச்சரியப்பட்டு இருக்கின்றனர். இந்தப் பழைய உலகம் பார்ப்பதற்குத் தெரிவதில்லை. பாபா மற்றும் பரந்தாமம் மட்டும் தான் நினைவிருக்கிறது. இது அதிசயமாக இருக்கிறதல்லவா ஆனால் பாபாவை முழுமையாக அறிந்து கொள்ளாத காரணத்தால், புத்தி யோகம் இல்லாததால் தேக உணர்வு முழுமையாக நீங்குவதில்லை. அவர்களை நாம் குரங்கு சம்பிரதாயம் என்கின் றோம். ஆத்ம உணர்வு உடையவராகும் போது தான் ஈஸ்வரிய சம்பிர தாயத்தினர் என்பார்கள். குரங்கு சம்பிரதாயத்தினருக்கு நாரதரின் ரூபத்தில் எடுத்துக்காட்டு காட்டப்பட்டு இருக்கின்றது. அவரும் பக்தர் தான், ஜால்ரா வாசித்தார். அவர்களுக்கு பாபா காண்பித்துள்ளார். பாருங்கள், நீங்கள் குரங்கு சம்பிரதாயத்தினர். அப்படி என்றால் ஆத்ம உணர்வு உடையவராக இருத்தல் மிகவும் கடினமாகும், மிகப் பெரிய குறிக்கோள் ஆகும். தூய்மையாக இருக்கிறார்கள். இப்படி நல்ல மற்றும் கெட்ட மனிதர்கள் இருக்க தான் செய்கிறார்கள். சந்நியாசிகள் வீடு வாசலை துறக்கிறார்கள். தூய்மையாக மாறுகிறார்கள். யார் வீடு வாசலை துறப்பதில்லையோ குடும்ப ஸ்தர்களாக இருக்கிறார்களோ அவர்கள் சென்று தங்களுடைய குருவாக அவர்களை ஏற்றுக் கொள்கிறார்கள். கலியுக உலகத்தின் அனைத்து மனிதர்களும் நாத்திகர்களாக, ஏழைகளாகவும் இருக்கிறார்கள். ஓ ! பகவான் ஓ! பரம்பிதா பரமாத்மா என அழைக்கிறார்கள். ஆனால் கடைசி யிலும் கூட அவர் யார் என்று அவரை அறியவில்லை. கூப்பிட்டு கூப்பிட்டு அவர்கள்

களைத்துப் போய்விட்டார்கள். அவரை சர்வ வியாபி என்றும் கூறுகிறார்கள். வழிபாடும் செய் கிறார்கள். ஆனால் அவரை அறியவில்லை. இது புரிந்து கொள்ள வேண்டிய விஷயம் ஆகும். பகாவன் வாக்கு, கீதையில் கூட இது அசுர சம்பிரதாயம் என்று பகவான் வாக்கு இருக்கிறதல்லவா! நீங்கள் குரங்கு போல இருக் கிறீர்கள் என்று பகவான் ஏன் கூறினார்? தங்கள் முகத்தை கண்ணாடியில் பாருங்கள். பகவானை அறியவில்லை. தேடிக் கொண்டே இருக்கிறார் கள். ஆகவே மனிதர்களுக்குத் தான் பகவான் கிடைக்க வேண்டும். தேடுகிறார்கள். ஆனால் அடையவில்லை. பகவான் வரும் போது தான் தனது அறிமுகத்தைக் கொடுப்பார். கீதையில் முழுமையாக அறிமுகம் இருக்கிறது. நான் ருத்திரன் என்று கூறுகின்றார். ருத்திரன் இந்த ஞான யக்ஞத்தைப் படைத் திருக்கிறார். ஒரு வேளை கிருஷ்ணர் படைத்தார் என்று கூறினால் கிருஷ்ணராகிய நான் இராஜயோகத்தைக் கற்பிக்கிறேன் என்று கூறவேண்டும். ஆனால் கிருஷ்ணர் ஞான யக்ஞத்தைப் படைக்கவில்லை. இதைக் குழந்தைகளாகிய நீங்கள் தான் அறிகிறீர்கள். மற்ற மனிதர்கள் அனைவரும் கலியுகத்தில் இருக்கிறார்கள். வாயிலிருந்து கற்களைத்தான் எறிகிறார் கள். பொய் சொல்பவர்களுக்கு இவர்களின் முகம் கருப்பாக இருக்கிறது என்பார்கள். சன்னியாச தர்மத்தின் ஸ்தாபனை நடக்கும் பொழுது சிருஷ்டி ரஜோ நிலையில் இருக்கின்றது. எனவே பாரதத்தை பவித்திரமாக வைப்பதில் இந்த பவித்திரமான தர்மத்தின் ஸ்தாபனை ஏற்படுகிறது. அவர்களுக்கு ரஜோ குண சன்னியாசி என்று கூறப்படு கிறது. நிச்சயமாக சன்னியாசம் செய்கிறார்கள், ஆனால் ரஜோகுண சன்னியாசம் ஆகும். அது ஒன்றும் சதோபிரதானமானது கிடையாது. பாரதம் காமச்சிதையில் விழும் பொழுது எரிய ஆரம்பிக்கிறது. அப்போது நாடகத்தில் இந்த சன்னியாசிகளின் பாகம் நடக்கிறது. அவைகளை யாரும் சகஜ ராஜயோகம் என்று கூறமாட்டார்கள். அதை பகவான் கற்பிக்கவில்லை. அவர்கள் பகவானையே அறிய வில்லை. அவர்கள் மிகப் பெரிய தவறைச் செய்து விட்டனர். அவர்கள் கிருஷ்ணரை துவாபர யுகத்தில் கொண்டுவந்து விட்டனர். பாபா அமர்ந்து மறந்து போன மனிதர் களுக்குப் புரிய வைக்கின்றார். ஆனால் புரிய வைப்பதில் மிகவும் தெளிவு வேண்டும். நீங்கள் சன்னியாச தர்மத்தினை நிந்திக்கின்றீர்கள் என சன்னியாசிகள் கூறுகின்றார்கள். வந்து புரிந்து கொள்ளுங்கள் என்று கூறுங்கள். நிந்தனை என்று எதைக் கூறுகின்றீர்கள்? முதலில் அதைத் தெரிவியுங்கள். பரம்பிதா பரமாத்மா அனைவருக்கும் தந்தையாக இருக்கின்றார். கீதையின் பகவான் அவர் தான் புரிய வைத்திருக்கின்றார். கிருஷ்ணர் கிடையாது. பரம்பிதா பரமாத்மாவே வந்து இது கலியுகத்தின் முடிவு என்று கூறியிருக்கிறார். மனிதர்களின் புத்தி இற்றுப் போய் அசுர நிலையை அடைந்திருக்கின்றது. இது பதீத அசுர உலகம் ஆகும். சத்யுகம் தூய்மையான தெய்வீக இராஜ்யமாகும். அவர்கள் தானே கடவுள் என நினைக்கிறார்கள். ஆனால் அப்படி இல்லை. ஈஸ்வர் (கடவுள்) அனைவருக்கும் தந்தையாவார். அவரை அனைவரும் நினைக் கிறார்கள். இது புரிந்து கொள்ள வேண்டிய விசயம் ஆகும். புரிந்து கொள்ள வேண்டும் என்றால் புரிந்து கொள்ளுங்கள். ஆனால் புரிய வைக்கக்கூடியவர் மிகவும் தெளிவாக இருக்க வேண்டும். யாருக்குள் கோபத்தின் பூதம் இருக்கிறதோ அவர்கள் என்ன புரிய வைப்பார்கள்? கோபம் என்ற பூதம், மோகம் என்ற பூதம், பேராசை என்ற பூதம் என சிறிய பெரிய பூதங்கள் இருக்கின்றன. கெட்ட பழக்கங்களும் இருக்கின்றன. நல்ல நல்ல குழந்தைகளுக்குள்ளும் கூட மாயை எதையாவது செய்விக்கிறது. இவை அனைத்தும் தேக உணர்வின் சைத்தான் ஆகும். தேக உணர்வு

வந்துவிட்டது என்றால் குரங்கு போன்று ஆகி விடுகிறார்கள். பிறகு அவர்கள் கோவிலில் வைக்கும் அளவிற்கு தகுதி அடைய முடியாது.

தேவி தேவதைகள் தான் கோவிலில் இடம் பெறும் அளவிற்கு தகுதி அடைகிறார்கள் என நீங்கள் அறிகிறீர்கள். அவர்களுக்காகதான் கோவில் உருவாக்கப்படுகிறது. சத்யுகத்தில் முழு உலகத்திற்கும் சிவாலயம் என்று கூறப்படுகிறது. அனைவரும் கோவிலில் இருக்கிறார்கள். சிருஷ்டியே தூய்மையான கோவிலாக மாறி விடுகிறது. உலகம் சிவாலயமாகி விடுகிறது. அங்கே இராஜா இராணியைப் போன்று பிரஜைகள் அனைவரும் தூய்மையாக இருக்கிறார்கள். யாருக்காவது மிகவும் யுக்தியோடு புரிய வைக்க வேண்டும். எலி கடிக்கவும் செய்கிறது, பிறகு ஊதியும் விடுகிறது. அதற்குள் இந்த அறிவு இருக்கிறது. யாராவது சன்னியாசி போன்றோர் வந்தால் முதலில் யுக்தியோடு அவர்களை மகிமை செய்ய வேண்டும். வாருங்கள், சன்னியாசி அவர்களே! நீங்கள் மிகவும் நல்லவர். சன்னியாசம் செய்திருக்கிறீர். வீடு வாசலை துறந்திருக் கிறீர். இரண்டு விதமான சன்னியாசம் இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். ஒன்று வீடு வாசலை விடக்கூடிய சன்னியாசம் ஆகும். மற்றொன்று வீடு வாசலை துறக்காத சன்னியாசம் ஆகும். இல்லறத்தில் இருந்து கொண்டே இராஜ யோகத்தை கற்றுக் கொண்டு சொர்க்கத்திற்கு அதிபதியாக மாற வேண்டும். இதை எப்போதாவது கேள்விப் பட்டு இருக்கிறீர்களா? இந்த விஷயம் எந்த சாஸ்திரத்திலும் இல்லையே என்று கூறுவார்கள். கீதையில் கிருஷ்ணரின் பெயரைப் போட்டு துவாபர யுகத்தில் கொண்டு வந்து விட்டனர் பிறகு எப்படி புரிந்து கொள்வார் கள். பிறகு சித்திரங்களை வைத்துப் புரிய வைக்க வேண்டும். உங்களுடையது வீடு வாசலை விடக்கூடியதாகும். அனைவரும் விடமாட்டார்கள். இல்லறமார்க்கம் இருக்கிறது. நீங்கள் இல்லறத்தில் இருந்து கொண்டே 5 விகாரங்களை சன்னியாசம் செய்யவில்லை. நாங்கள் செய்து கொண்டு இருக்கிறோம். எங்களுக்கு பரமாத்மாவின் உதவி கிடைத்துக் கொண்டு இருக் கின்றது. இவ்வாறு இல்லற விவகாரத்தில் இருந்து கொண்டே 5 விகாரங்களை சன்னியாசம் செய்வதால் நாம் சொர்க்கத்திற்கு அதிபதியாகலாம். சத்யுகத்தில் தேவி தேவதைகள் பவித்திர மாக இருந்தார்கள். இப்போது இல்லை. கலியுகத்திற்குப் பிறகு சத்யுகம் வரவேண்டும். பாபா தான் வந்து சத்யுகத்தை ஸ்தாபனை செய்கிறார். இல்லறத்தில் இருந்து கொண்டே தாமரை மலருக்குச் சமமாக தூய்மையாக மாற்றுகிறார். நெருப்பும் பஞ்சும் ஒன்றாக இருக்க முடியாது என்று நீங்கள் கூறுகின்றீர்கள். ஆனால் இங்கே இருக்கிறார்கள். உங்களிடம் பிராப்தியின் குறிக்கோள் எதுவும் இல்லை. எல்லையற்ற தந்தை வரும்பொழுது தான் பழைய உலகத்தின் அழிவு மற்றும் புது உலகத்தின் ஸ்தாபனை நடைபெறுகிறது. இந்த ஞானம் நமக்கு புதிய உலகத் திற்காகவே கிடைத்திருக்கின்றது. தேகம் உட்பட எதுவெல்லாம் உங்கள் தொடர்பில் இருக்கிறதோ அனைத்தையும் மறந்து, தன்னை ஆத்மா என உணர்ந்து என்னை நினையுங்கள் என பாபா கூறுகின்றார். இது நம்முடைய சதோபிரதானமான இராஜயோகம் ஆகும். இப்போது தமோபிரதானமாக இருக்கிறது. மீண்டும் சதோபிரதானமான சிருஷ்டியாக அவசியம் மாற வேண்டும். சதோபிரதானமாக மாற்றக்கூடியவர் படைக்கக்கூடியவர் பாபா தான். நாம் அந்த எல்லையற்ற தந்தையிடமிருந்து இதை கற்றுக் கொண்டு இருக்கின்றோம். கிருஷ்ணரிட மிருந்து கற்கவில்லை. பகவான் ஒருவரே. பிரம்மா, விஷ்ணு, சங்கரருக்குக் கூட

தேவதை என்று கூறப்படுகிறது. அவர் களை விட கீழான பிரிவினருக்கு மனிதர்கள் என்று கூறப்படு கிறது. பகவான் பரந்தாமத்தில் வசிக்கின்றார். ஆத்மாக்களாகிய நாமும் அங்கே இருக் கின்றோம். இவ்வாறு மிகத்தெளிவாக புரிய வைக்க வேண்டும். ஆனால் யோகா முழுமையாக இல்லை என்பதால் தாரணையாவதில்லை. பாபா என்ன புரிய வைக்கின்றாரோ அது யாருக்கும் நினைவில் இருக்கிறதா என்ன? ஆனால் சில குழந்தைகள் நாங்கள் நினைக்கின்றோம் என்று கூறலாம். ஆனால் பாபா ஏற்பதில்லை. ஒரு வேளை நீங்கள் நினைக்கின்றீர்கள் என்றால் புத்தி சுத்தமாக வேண்டும். மேலும் தாரணை நன்றாக இருக்க வேண்டும். தாரணை இருக்கிறது என்றால் பிறகு செய்விக்கவும் வேண்டும். நன்மை செய்ய வேண்டும். பாபா வந்து அனை வருக்கும் நன்மை செய்கிறார் என்று உங்களுக்குத் தெரியும். மாயை இராவணன் தீமை செய் கிறான். பாபா வந்து ஒரே முறை 21 பிறவிகளுக்கு நமக்கு நன்மை நடக்கும் அளவிற்கு நன்மை செய்கிறார். நன்மை என்று வேண்டுமானாலும் சொல்லுங்கள். கிருபை, ஆசீர்வாதம் என்று எதைச் சொன்னாலும் துவாபர யுகத்தில் கிருபை அற்ற நிலை ஆரம்பமாகிறது. இராவணன் அபகாரம் செய்கிறான். ஸ்ரீமத்தினால் தான் நீங்கள் யாருக்கு வேண்டுமானாலும் நன்மை செய்ய முடியும். பிறகு தேக அபிமானம் வந்ததும் தீமை செய்ய ஆரம்பித்து விடுவர். நன்மை செய்வதால் எதிர்காலத்தில் 21 பிறவிகளுக்கு செல்வம் சேமிப்பாகிறது. தீமை செய்வதால் எது சேமிப்பாகிறதோ அதுவும் அழிந்து போகிறது. எப்போது உபகாரம் செய்ய அறிகிறீர்களோ அப்போது செய்ய வேண்டும். நன்மை செய்யத் தெரியவில்லை என்றால் நிச்சயமாக அசுர வழிப்படி தீமை தான் செய்வீர்கள். மனிதர்கள் ஒவ்வொருவரும் ஒருவருக்கொருவர் அபகாரம் தான் செய்கின்றனர். காம வாளை செலுத்துகின்றனர் பாபாவை மறந்தனர், உபகாரம் செய்வதை மறந்தனர் என்றால் அவர்கள் அபகாரியாக அவசியம் ஆவார்கள். ஒரு நொடியில் நன்மை, பிறகு ஒரு நொடியில் தீமை செய்து விடுகிறார்கள். நல்ல நல்ல குழந்தைகள் எவ்வளவு நன்மை செய்பவராக இருந்தனர்! நன்மை செய்வதற் கான கல்வியை அறிந்திருந்தனர். தனக்கும் நன்மை செய்து கொண்டனர், மற்றவர்களுக்கும் நன்மை செய்தனர். பிறகு மாயாவின் சக்கரத் தில் வந்து ஓடிப்போய் விட்டனர். தீமை செய்பவராகி விட்டனர். எவ்வளவு அபகாரம் செய்கிறார்கள். எதுவோ நடந்திருக்கிறது, அதனால் தான் ஓடிவிட்டனர் என மனிதர்கள் நினைக் கிறார்கள். பிறகு நாம் எப்படி போவது? தவறுதலாக உளறுகிறார்கள். அப்படி செய்வதால் நன்மை செய்து எவ்வளவு சேமித்தார்களோ, அதை தீமை செய்து தனது சேமிப்பு கணக்கை ஒன்றும் இல்லாததாக ஆக்கி விடுகிறார்கள். இவ்வாறு பலர் இருக்கிறார்கள். இன்னும் வந்து கொண்டேயிருப்பார்கள். பாருங்கள்! யார் நன்மை செய்கிறார்களோ அவர்களே தேக உணர்வில் வந்து தீங்கு செய்பவர்களாக ஆகிறார்கள். மனிதர்கள் மனிதர்களுக்கே தீங்கு செய்கிறார்கள். ஸ்ரீமத்படி நடக்காத வரை யாரும் நன்மை செய்ய முடியாது. தீங்கு செய்விப்பது இராவணனின் வழியாகும். அவ்வப்போது ஸ்ரீமத்படியும் அவ்வப்போது இராவணனின் வழிப்படியும் நடக் கிறார்கள். கோபம் என்ற பூதம் வந்துவிட்டது என்றால் தீமை செய்து விட்டனர். பாபாவின் மீது அபகாரத்தின் களங்கத்தை ஏற்படுத்தி விட்டனர். நிந்தனை செய்வித்து விட்டனர். பாபா என்ன சொல்வார். ஈஸ்வரிய வாரிசுகள் இப்படி இருக்கிறார்கள்! பிறகு அவர்கள் மனதிலிருந்து இறங்கி விடுகிறார்கள். யாருடைய பூதமாவது விலகிப் போய் விட்டால் மகிமையும் செய் கிறார்கள். கோபம் மிகவும் மோசமானது. ஆகவே தான் பாபா

எப்போதும் இனிமையான சுபாவம் உடையவராகுங்கள் என்று கூறுகின்றார். கோபத்தின் சுபாவம் அஞ்ஞானம் ஆகும். பற்றுதலை முற்றிலுமாக விடுங்கள் என்று பாபா கூறுகின்றார். பற்றுதல் கொஞ்சம் கொஞ்ச மாக விடுபட்டு கடைசி நேரம் வரும் போது சம்பூரணமாக மாறுவார்கள். ஓட்டப் பந்தயம் அல்லவா! மம்மா பாபா முதலில் வருகிறார்கள் என குழந்தைகள் அறிகிறீர்கள். எனவே அவர்களுடைய வழியில் நடந்து பின்பற்ற வேண்டும். தாரணை செய்ய வேண்டும். தாய் தந்தை யினுடைய இதயத்தில் இடம் பிடித்தால் சிம்மாசனத்தில் அமரலாம். நாம் இலட்சுமியை மணப்பதற்கு அதாவது தாய் தந்தையின் சிம்மாசனத்தில் அமருவதற்குத் தகுதி அடைந்திருக் கிறேனா என்று தன்னையே கேட்க வேண்டும். நமக்குள் கோபம் இருக்கிறது என்று புரிந்தால் ஒருபோதும் இதயத்தில் இடம்பெற முடியாது. எதிர்காலத்தில் மகாராஜா மகாராணி ஆக முடியாது. ஒவ்வொரு அடியிலும் ஸ்ரீமத்படி நடக்க வேண்டும். ஒரு வேளை இராஜ துரோகி ஆகிவிட்டால் சண்டாளனாக ஆவார்கள். போன கல்பத்தைப் போன்றே விசயங்களை பாபா தினந்தோறும் கூறிக்கொண்டு இருக்கின்றார். இதில் எங்கும் வித்தியாசம் இருக்க முடியாது. எவ்வளவு ஞானத்தின் போதை இருக்க வேண்டும்! ஆனால் யார் சேவை யில் இருக் கிறார்களோ அவர்களுக்குத்தான் இருக்கும். யார் எப்படி சேவை செய்கிறார்களோ அவர்களுக்கு நிச்சயமாக பலன் கிடைக்கும். ஞானம் கொடுத்தல் நம்பர் ஒன் ஆகும். அதில் பலருக்கு சுகத்தைக் கொடுத்து சக்கரவர்த்தி ஆக்க வேண்டும். மற்றவர்களை மாற்றுவார்கள். சேவையின் யுக்திகள் மிகவும் நன்றாக தெரிவிக்கப்படுகிறது. எங்கு வேண்டுமானாலும் சேவை நடக்கும். செய்தால் 100 பேரில் ஒருவர் விழிப்பர். கடின உழைப்பின் காரியம் ஆகும்.

இவ்வாறு இரவும் பகலும் பாபாவிற்கு சிந்தனைகள் ஓடிக் கொண்டேயிருக்கிறது. பல்வேறு விதமான சிந்தனைகள் நடக்கிறது. எவ்வளவு தடைகள் ஏற்படுகிறது! உலகத்தை தூய்மையாக சொர்க்கமாக மாற்ற வேண்டும். அதற்காக அளவற்ற எண்ணங்கள் சென்று கொண்டு இருக் கின்றது. சிந்தனை செய்து செய்து இரவிலிருந்து காலை ஆகிவிடுகிறது. ஆகையால் தான் தூக்கத்தை வெல்லக்கூடிய........ எனப் பாடப்பட்டிருக்கிறது. பாபாவிற்கு சில நேரங்களில் தூக்கம் வருவதில்லை. குழந்தைகளை உலகத்திற்கு அதிபதியாக்க வேண்டும் என்றால் அவ்வளவு கவலை இருக்கிறது! குழந்தைகளாகிய நாம் எவ்வளவு ஸ்ரீமத்படி நடக்கின்றோம் என்று உங்களுக்கும் கவலை இருக்க வேண்டும். பாப்தாதாவின் சங்கத்தில் குழந்தைகளாகிய நாம் தான் தோள் கொடுக்க வேண்டும். முழு உலகத்தையும் கிளப்ப வேண்டும். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீக குழந்தைகளுக்கு ஆன்மீக தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. ஒருபோதும் இராவணனின் வழிப்படி நடந்து தேக உணர்வில் வந்து பாபாவிற்கு தீங்கு செய்யக்கூடாது. நிந்தனை செய்விக்கக்கூடாது. ஸ்ரீமத்படி

தனக்கும் மற்றும் அனைவருக்கும் நன்மை செய்ய வேண்டும்.

2. கோபத்தின் பூதம் பிரவேசமாக விடக்கூடாது. மிகவும் இனிமையான சுபாவம் உடையவர் ஆக வேண்டும். யுக்தியோடு சேவை செய்ய வேண்டும்.

வரதானம் : தொடர்பில் வரக்கூடிய ஆத்மாக்களுக்கு சதா சுகத்தின் அனுபவம் செய்விக்கக் கூடிய மாஸ்டர் சுகம் தரும் வள்ளல் ஆகுக.

சுகம் தரும் வள்ளலின் குழந்தைகள் நீங்கள் மாஸ்டர் சுகம் தரும் வள்ளல்கள். அதனால் சுகத்தின் கணக்கை சேமித்துக் கொண்டே இருங்கள். இதை மட்டும் சோதித்துப் பாருங்கள் -- இன்று நாள் முழுவதும் யாருக்காவது துக்கம் கொடுக்கவில்லை தானே? ஆனால் எத்தனைப் பேருக்கு சுகம் கொடுத்தோம் என்று அதையும் சோதித்துப் பாருங்கள். தொடர்பில் வரும் அனை வரும் மாஸ்டர் சுகம் தரும் வள்ளல்களாகிய உங்கள் மூலமாக ஒவ்வோரடியிலும் சுகத்தின் அனுபவம் செய்ய வேண்டும். இது தான் தெய்விகத் தன்மை அல்லது அலௌகிகத் தன்மை எனச் சொல்லப்படும். ஒவ்வொரு சமயமும் ஸ்மிருதி இருக்கட்டும் -- இந்த ஒரு ஜென்மத்தில் 21 ஜென்மங்களுக்கான கணக்கை சேமிக்க வேண்டும்.

சுலோகன்: ஒரு பாபாவைத் தனது உலகமாக ஆக்கிக் கொள்வீர்களானால் அழியாத பிராப்திகள் கிடைத்துக் கொண்டே இருக்கும்.